வெங்கடகிருஷ்ணன்

V23 . N10'1. 2.4.58

23-1.

3L

[illegible]

N50·23·1.

210422

52

ॐ श्री गुरुभ्यो नमः

மாத்வ மித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 23 புஸ்தகம் 23	விக்ருதி ஸம்வத்ஸரம் சைத்ர-மு 2—4—50' பானுவாரம்	No. 1 நெ. 1

ஸ்ரீ பகவத் கீதை.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது.

[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

3-வது அத்யாயம்.

(முன் 22வது வால்யூம் 224-ம் பக்கம் தொடர்ச்சி)

तस्मात्त्वमिन्द्रियाण्यादौ नियम्य भरतर्षभ ॥
पाप्मानं प्रजहिह्येनं ज्ञान विज्ञान नाशनं ॥ ४१ ॥

41 தஸ்மாத் த்வமிந்திரியாண்யாதௌ நியம்ய பரதர்ஷப||
பாப்மானம் ப்ரஜஹிஹ்யேனம் க்ஞான விக்ஞான நாசனம்||

பரதர்ஷப பரதகுலத்தில் ச்ரேஷ்டனை அர்ஜுனை! த்வம் நீ தஸ்மாத் இந்திரியங்களின் மூலமாய் காமம் போஷகமானதால், ஆதௌ முதலில் இந்திரியாணி இந்திரியங்களை நியம்ய விஷயங்களுடன் சேர்க்கையுள்ளதாய் செய்துகொள்ளாமல், அவைகளை ஸ்வாதீனம் செய்துகொண்டு, க்ஞானவிக்ஞான நாசனம் க்ஞானம் சாமானிய க்ஞானம் என்ன, விக்ஞானம் விசேஷக்ஞானம் என்ன, இவைகளை நாசனம் நாசம் செய்யும் பாப்மானம் பாபத்திற்கு காரணமான ஏனம் இந்த காமத்தை ப்ரஜஹி நாசம்செ

ய்:து

ஹி சத்ருவை அவனுடைய அதிஷ்டானத்தை நாசம் செய்வதால், கொல்லமுடியும் என்பது பிரசித்தம்.

ஹி எந்த காரணத்தைக்கொண்டு காமரூபியான சத்ரு, க்ஞானத்தை ஆவரணம் செய்து மோகத்தை உண்டுபண்ணுகிறதோ, தஸ்மாத் மகாகுலமான பாதவம்சத்தில் பிறந்தவனுகலால், அந்த சத்ருவை ஜயிக்க ஸமர்த்தனை த்வம் நீ ஆதௌ அந்த சத்ரு ஆக்ரமிப்பதின் முன்னமேயே இந்திரியாணி இந்திரியங்களை விஷயங்களால் ஸ்பரிசிக்கவிடாமல் செய்து, விஷயங்களின் ஸ்பரிசம் ஏற்பட்டிருந்தாலும் கலக்கமேற்படாமல் செய்து, அப்படியே மனஸ்ஸையும் புத்தியையும் அடக்கி, அவைகளையும் ஜயித்து, காமத்தை ஜயிக்கவேண்டும். மனஸ்ஸும் புத்தியும் அதிஷ்டானம் என்று பிந்தி சொல்லப்பட்டதால் இந்திரியங்களைப் போலவே இவைகளையும் ஜயிக்கவேண்டும் என்று உபலக்ஷணயா சொல்லப்பட்டதாகும். அல்லது மனஸ்ஸும் புத்தியும் இந்திரியங்களாதலால் இந்திரியாணி என்று சொன்னதைக்கொண்டு அவைகளையும் நிக்ரஹிக்கவேண்டுமென்று சொல்லலாம். இந்திரியங்களை ஆதியில் நியமனம் செய்து என்று சொன்னதைக்கொண்டு, பிந்தி மனஸ்ஸையும் புத்தியையும் அடக்கவேண்டும் என்று, சூசிக்கப்பட்டதாகும் எனலாம். இந்திரியங்கள் அடக்கப்பட்டால் வெளி வாசல்கள் சாத்தப்பட்டுப்போன பின், உள்ளே இருக்கும் மனஸ் புத்தி இவைகளும் அடக்கப்பட்டுவிடும் என்று இவைகள் தனியாகச் சொல்லப்படவில்லை என்றும் சொல்லலாம். ஆதௌ ஆதியில் என்றால் மோக்ஷத்திற்கு உபாயத்தை அனுஷ்டானம் செய்ய ஆரம்பிக்கும் காலத்திலேயே இந்திரியங்களை அடக்கி, இந்திரிய காரியங்களுள்ள கர்மயோகத்திலேயே அடக்கி, என்றும் சொல்லப்பட்டதாகும். பாப்மானம் பாபரூபமானது. பாபத்திற்கு காரணமானது. க்ஞான விக்ஞான நாசனம் க்ஞானம் ஸாமான்ய க்ஞானம், சாஸ்திரத்தை பாடம்சொன்ன குருவின் உபதேசத்தால் ஏற்பட்ட பரோக்ஷ க்ஞானம் என்றும் சொல்லலாம். விக்ஞானம் விசேஷக்ஞானம், அபரோக்ஷ க்ஞானம், என்னும் அர்த்தமாகும். இந்த இருவகை க்ஞானத்திற்கும் நாசகர

மானது காமம். ஆத்மஸ்வரூபக்ஞானம், க்ஞானம் என்பது, ஆத்மாவைச் சேர்ந்த விசேஷ விஷய க்ஞானம் விக்ஞானம் ஆகும். இவைகளை நாசம் செய்யும் க்ஞானம் என்பது ஆத்ம க்ஞானம் என்றும், விக்ஞானம் ஆத்மஸ்வரூபத்தை விசேஷமாய் அறிவிக்கும் சாஸ்திரஜன்ய க்ஞானம் என்றும், சொல்லலாம். சாஸ்திரஜன்ய க்ஞானம் ஸாமானிய க்ஞானம் என்றும், நிதித்யாஸனத்தால் ஏற்பட்ட க்ஞானம் விக்ஞானம் என்றும் சொல்லப்படலாம். இந்த க்ஞானங்களை எல்லாம் காமம் அழித்துவிடும் என்று தாத்பரியம். ப்ரஜஹி ப்ர சம்பூர்ணமாய், பாக்கிவைக்காமல் ஜஹி நாசம்செய். ப்ரஜஹிஹி என்பதையும் ஒரேபதமாய்க்கொள்ளலாம். காமத்தை விடு என்று பொருள் ஏற்படும். திருடன் பிரவேசிப்பதற்கு முன்னமேயே, அவன் பிரவேசிக்கும் வாசல்களை தடுத்துவிடுவது போலவே இந்திரியங்களாகிய வாசல்களை மூடச்செய்யவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. இவ்வாறு காமத்தை அர்ஜுனு ! ஜயிக்கவேண்டும்.

इंद्रियाणि पराण्याहुः इंद्रियेभ्यः परंमनः ।
मनसस्तु पराबुद्धिः योबुद्धेः परतस्तु सः ॥ ४२ ॥

एवं बुद्धेः परंबुध्वा संस्तभ्यात्मानमात्मना ।
जहि शत्रुं महाबाहो कामरूपं दुरासदं ॥ ४३ ॥

42 இந்திரியாணி பராண்யாஹு: இந்திரியேப்ய: பரம்மன:।
மனஸஸ்து பராபுத்தி: யோபுத்தே: பரதஸ்துஸ:॥

43 ஏவம்புத்தே: பரம்புத்வாஸம்ஸ்த ப்யாத்மான மாத்மனு।
ஜஹிசத்ரும் மஹாபாஹோ காமருபம் துராஸதம்॥

42. மஹாபஹோ மாபாஹு உள்ள அர்ஜுனு ! இந்திரியாணி இந்திரியங்கள் சரீரத்தைவிட பராணி மேலானவைகள் என்று ஆஹு: க்ஞானிகள் சொல்லுகின்றனர். இந்திரியேப்ய: இந்திரியங்களைவிட மன: மனஸ் பரம் உத்தமமானது. மனஸ:து

மனஸ்ஸைவிட புத்தி: புத்தியானது பரா உத்தமமானது. ய: எவன் புத்தே: பரத: புத்தியைவிட அதிக உத்தமனாய் இருக்கிறானோ ஸ: அவன் பரமாத்மா.

43. ஏவம் இம்மாதிரி புத்தே: பரம் புத்தியைவிட உத்தமன் பரமாத்மா என்று புத்வா அறிந்துகொண்டு ஆத்மனா புத்தியால் ஆத்மானம் மனதை ஸம்ஸ்தப்ய திடப்படுத்திக்கொண்டு அதாவது விஷயங்களில் செல்லாமற்செய்து துராஸதம் கஷ்டப்பட்டுதான் போக்கிக்கொள்ள முடியுமான சத்ரும் சத்ரு ரூபமான காமத்தை ஜஹி நாசம்செய்துகொள்.

இந்திரியங்களையும் மனஸ் புத்தியையும் ஸ்வாதீனம் செய்துகொண்டு காமத்தை பாக்கிவைக்காமல் நாசம்செய், என்று பகவான் சொன்னதற்கு, அதனால் காமம் ஸ்தூலமாகப் போகுமே அல்லாது சூக்ஷ்மரூபத்துடன் காமம் உள்ளூர இருக்குமே, அதை நாசப்படுத்த உபாயம் என்ன, என்று கேட்டதாய் அதற்கு இந்தஇரண்டு சுலோகங்களால் பதில் அளிக்கப்படுகிறது எனலாம். அர்ஜுனா! அதிஷ்டானத்தை நிரோதம் செய்வதால், ஸ்தூலமாக ஜயித்து, உலகிலுள்ள ஜடபதார்த்தங்கள் முதற்கொண்டு பரமாத்மாவரையில் மேலுக்குமேல் உத்தமம் எது என்பதை அறிந்து, எல்லோரையும்விட உத்தமன் பகவான் என்று தெரிந்துகொண்டு, அந்த தாரதம்ய ஞானத்தால் முன்னைவிட காமத்தை அதிகமாய் ஜயித்து, ஸர்வோத்தமனான அந்த பகவானின் ஸாக்ஷாத்காரத்தால் காமத்தை ஸமூலமாய் வேருடன் நசித்துவிடு. அந்த தாரதம்யம் எப்படி இருக்கிறது என்றால் அதைச் சொல்கிறேன் கேள். இந்த சரீரம் ஜடமானது. ஜடத்தை விடவும் விஷயங்களைவிடவும் இந்திரியங்கள் உத்தமமானவைகள். ஸ்வீகரிக்கப்படுபவைகளான விஷயங்களை கிரகிப்பதால், ஞானத்தை உண்டாக்கும் சக்தியோடு கூடியிருப்பதால், பேசுதல் உண்ணுதல், நடமாடுதல் முதலான சக்தியுடன் இருப்பதால், இந்திரியங்கள் உத்தமமானவைகள் எனலாம். இந்திரியங்களைவிடவும் மனஸ் உத்தமம். (தொடரும்)

210422

பாலர் ஸ்தோத்திரம்.

(முன் 22-வது வால்யூம் 228-ம் பக்கம் தொடர்ச்சி)

21

62. பாலபாச்யுத, பாலயாஜித பாலபகமலாலய
லீலயாத்ருத பூதராம்பு ருஹோதர ஸ்வஜநைதர|| (பல்லவி)
மத்வ மானஸ பத்மபானு ஸமம்ஸ்மர ப்ரதிஸம்ஸ்மர
ஸ்நிக்தநிர்மல சீதகாந்தி லஸன்முகம் கருணோன்முகம்
ஹ்ருத்ய கம்பு ஸமானகந்தர மக்ஷயம் துரித க்ஷயம்
ஸ்நிக்த ஸம்ஸ்துத ரௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

63. அங்கதாதி சுபோபபாணி யுகேனஸம் க்ஷுபிதைனஸம்
துங்கமால்ய மணீந்த்ரஹார ஸரோரஸம் கலரோஸம்
மங்களப்ரத மந்ததாம விராஜிதம் பஜதாஜிதம்
தம்க்ருணேவர ரௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

64. பீனரம்ய தனூதரம் பஜஹேமன: சுபஹேமன:
ஸ்வானுபாவ நிதர்சனாய நிசந்தமர்த்திஸு சந்தமம்
ஆனதோஸ்மி நிஜார்ஜுனப்ரிய ஸாதகம்கல பாதகம்
ஹீனதோஜ்ஜித ரௌப்ய பீடக்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

65 ஹேமகிங்கிணி மாலிகாரஸ நாஞ்சிதம் தமவஞ்சிதம்
ரம்யகாஞ்சன வஸ்த்ரசித்ர கடிம்கன ப்ரபயாகனம்
கம்ரநாக கரோபமோரு மநாமயம் சுபதீமயம்
நௌம்யஹம் வரரௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

66. வ்ருத்தஜானு மனோக்ய ஜங்க மமோஹதம் பரமோஹதம்
ரத்னகல்ப நகத்விஷாஹ்ருத முத்தம ஸ்துதி முத்தமம்
ப்ரத்யஹம்ரசி தார்ச்சநம் ரமயா ஸ்வயா கதயாஸ்வயம்
சித்த சிந்தய ரௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

67. சாருபாத ஸரோஜயுக்ம ருசாமரோச்சய சாமரோ
தாரமூர்த்தஜ பாரமண்டல ரஞ்ஜகம் கலிபஞ்ஜகம்
வீரதோசித பூஷணம்வர நூபுரம்ஸ்வ தனூபுரம்
தாரயாத்மனி ரௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

21 கிருஷ்ணஷ்டகம் (பாட்டு)

68. சுஷ்கவாதி மனோதிதூர தாரகமோத்ஸவ தாரகம்
ஸத்கவீந்த்ர வசோவிலாஸ மஹோதயம் மஹிதோதயம்
லக்ஷயாமி யதீச்வரை: க்ருதபூஜனம் குணபாஜனம்
திக்கிருதோபம சௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

69 நாரதப்ரிய மாரவிசாம்பு ருஹேக்ஷணம் நிஜலக்ஷணம்
த்வாரகோபம சாருதீப ருசாந்தரே கதசிந்தரே
தீரமானஸ பூர்ணசந்த்ர ஸமான மச்யுத மானம
த்வாரகோபம ரௌப்யபீட க்ருதாலயம் ஹரிமாலயம் (பாலயா)

70. ரௌப்யபீட க்ருதாலயஸ்ய ஹரே: ப்ரியம் துரிதப்ரியம்
தத்பதார்ச்சக வாதிராஜயதீரிதம் குணபூரிதம்
கோப்யமஷ்டக மேததுச்சமுதேமம த்விஹநிர்மம
ப்ராப்ய சுத்த பலாதயத்ர ஸோ கோமலம் ஹததிமலம் (பாலய)

22

71. ஜயதிதேதிகம் கிருஷ்ண ஜன்மனா வ்ரஜ
ச்ரயதி இந்திரா க்ருஷ்ண ஸாது தத்ரஹி|
தயித த்ருச்யதாம் க்ருஷ்ண த்வாதிதிருக்ஷதாம்
த்வயி த்ருதாஸவ: க்ருஷ்ண த்வாம் விசின்வதே||

72. வ்ரஜ ஜனார்த்திஹன் க்ருஷ்ண வீரயோஷிதாம்
நிஜஜனஸ்மய க்ருஷ்ண த்வம் ஸனஸ்மித|
பஜஸகேபவே க்ருஷ்ண கிம்கரீ ஸ்மனோ
ஜலருஹானனம க்ருஷ்ண சாருதர்சயன||

73. சரதுதாசயே க்ருஷ்ண ஸாதுஜாதஸத்
ஸரஸிஜோதர க்ருஷ்ண ஸ்ரீ முஷாத்ருசா|
ஸுரத நாததே க்ருஷ்ண சுல்கதாஸிகா
வரதநிக்னதோ க்ருஷ்ண நேஹ கிம்வத:||

74. விஷஜலாசயாத் க்ருஷ்ண வ்யாளராக்ஷஸாத்
வர்ஷமாருதாத் க்ருஷ்ண வைத்யுதானலாத|
விருஷமயாத்மயாத் க்ருஷ்ண விச்வதோமுகாத்
விருஷப தேவயம் க்ருஷ்ண ரக்ஷிதாமுஹு:||

22. கோபிகை

75. நகலுகோபிகா க்ருஷ்ண நந்தனைபவான்
அகிலதேஹிநாம் க்ருஷ்ண அந்தராத்மத்ருக்|
விகனஸார்ச்சிதோ க்ருஷ்ண விச்வகுப்தயே
ஸகஉதேயிவான் க்ருஷ்ண ஸாத்வதாம்குலே||

76. விரசிதாபயம் க்ருஷ்ண வ்ருஷ்ணி வர்யதே
சரணமீயுஷாம் க்ருஷ்ண ஸம்ஸ்ருதேர்பயாத்|
கரஸரோருஹம் க்ருஷ்ண காந்தகாமதம்
சிரஸிதேஹிந: க்ருஷ்ண ஸ்ரீ கரக்ரஹம்||

* * *

77. தவகதாம்ருதம் க்ருஷ்ண தப்தஜீவனம்
கவிபிரீடிதம் க்ருஷ்ண கல்மஷாபஹம்|
ச்ரவணமங்களம் க்ருஷ்ண ஸ்ரீ மதாததம்
புவி க்ருணந்திதே க்ருஷ்ண பூரிதாஜனா:||

* * *

78. பதிஸுதான்வய க்ருஷ்ண ப்ராத்ருபாந்தவான்
அதிவிலங்க்யதே க்ருஷ்ண ஹ்யச்யுதாகதா:|
கதிவிதஸ்தவோ க்ருஷ்ண கீதமோஹிதா:
கிதவயோஷித: க்ருஷ்ண கஸ்த்யஜேந்நிசி||

* * *

79. ஸ்ரீசுக உவாச|
இதிகோப்ய: ப்ரகாயந்த்ய: ப்ரலபந்த்யஸ்ச சித்ரதா|
ருருது: ஸுஸ்வரம் ராஜன் க்ருஷ்ணதர்சன லாலஸா:||
தாஸாம் ஆவிரபூத்சௌரி: ஸ்மயமான: முகாம்புஜ:|
பீதாம்பரதர: ஸ்ரக்வீ ஸாக்ஷான் மன்மத மன்மத:||

23

80. அங்கனா மங்கனா மந்தரே மாதவோ
மாதவம் மாதவம் ச்சாந்தரே சாங்கனா|
இத்தமா கல்பிதே மண்டலே மத்யக:
ஸஞ்ஜகௌ வேணுனா தேவகீ நந்தன:

24

81. மச்சரூப லயோததி ஹாரின்
வேதவிநேத்ரு சதுர்முகவந்த்ய|
கூர்மஸ்வரூபக மந்தரதாரின்
லோகவிதாரக தேவவரேண்ய|

23 ராஸக்ரீடை ஸ்துதி 24 த்வாதச ஸ்தோத்திரம் (தாலாட்டுபாட்டு மெட்டு)

82. ஸூகர ரூபகதானவ சத்ரோ
பூமிதாரக யக்ஞவராங்க
தேவந்ருஸிம்ஹ ஹிரண்யகசத்ரோ
ஸர்வபயாந்தக தெய்வதபந்தோ।

83. வாமன வாமன மாணவவேஷ
தைத்யவராந்தக காரணரூப
ராமப்ரு கூத்வஹ ஸூர்ஜித தீப்தே
க்ஷத்ரகுலாந்தக சம்புவரேண்ய।

84. ராகவ ராகவ ராக்ஷஸ சத்ரோ
மாருதி வல்லப ஜானகிகாந்த
தேவகி நந்தன ஸுந்தரரூப
ருக்மணீ வல்லப பாண்டவ பந்தோ।

85. தேவகிநந்தன நந்தகுமார
ப்ருந்தாவனாஞ்சன கோகுலசந்த்ர
கந்தபலாசன ஸுந்தரரூப
நந்தித கோகுல வந்தித பாதா

* * *

25

86. ப்ரபன்னானுராகம், ப்ரபாகாஞ்சனாங்கம்
ஜகத்கீத சௌர்யம், துஷாராத்ரி தைர்யம்
த்ருணீபூத ஹேதிம், ரணோத்யத் விபூதிம்
பஜே வாயுபுத்ரம், பவித்ராத் பவித்ரம்॥

87. பஜே ஹேமரம்பா, வனே நித்யவாஸம்
பஜே பாலபானு, ப்ரபா சாருபாஸம்
பஜே சந்த்ரிகாகுந்த, மந்தாரஹாஸம்
பஜே ஸந்ததம் ராம, பூபாலதாஸம்।

88. பஜே லக்ஷ்மண ப்ராண ரக்ஷாதிதீக்ஷம்
பஜே கோர ஸங்க்ராம ஸம்மோஹிதாக்ஷம்
பஜே தோஷிதாநேக கீர்வாணபக்ஷம்
பஜே ராமாம்ருத ப்ராப்தி தீக்ஷம்

25. ஹனுமத்புஜங்கம்

பிரம்மஸூத்திரம்.

1வது அத்யாயம் 4வது பாதம்
3வது அதிகரணம்.

(ஆசிரியர் ஸ்ரீ ஆத்பம் பாகவத ரங்கனாதாசாரியார் எழுதுவது.)

(முன் 21வது வால்யூம் 95-ம் பக்கம் தொடர்ச்சி)

விஷ்ணு ஒருவரே அநேக ரூபங்களாய் ஆகி சரீரத்தில் நியாமகராய் ஒரே ரூபத்துடன் இருந்துகொண்டு, பஞ்சஜனாதிகளில் அவ்வளவு ரூபங்களாய் ஆதேயமாய் சொல்லப்படுகிறார் என்று சொல்லப்பட்டதின் பேரில் ஆக்ஷேபணை ஒன்று சொல்லப்படுகிறது. பஞ்சஜனாதிகள் விஷ்ணு என்பதற்கு விசேஷ ஹேது—காரணம் இல்லை. ஆதலால் பஞ்சஜனாதி சப்தவாச்யர்-சப்தத்தால் சொல்லப்படுபவர் விஷ்ணு அல்ல என்று சம்சயம் ஏற்பட்டதற்கு மற்றொரு சூத்ரம் சொல்லப்பட்டது. அதில் பஞ்சஜன சப்தத்தால் வாச்யமான ரூபங்களையும் விசேஷகாரமான ஹேதுவையும் ஸ்ரீ வேதவியாஸர் அறிவிப்பதாவது:—

ओं प्राणादयो वाक्य शेषात् ओं ॥ १३ ॥

13 ஓம் ப்ராணாதயோ வாக்யசேஷாத் ஓம்

ஸூத்திரத்தின் அர்த்தமாவது—"யஸ்மின் பஞ்ச பஞ்சஜனா:" என்னும் சுருதியில் இருந்துவரும் பஞ்சஜன சப்தத்தால் வாச்யர்கள் அதாவது சொல்லப்படுபவர்கள் ப்ராணாதய: ப்ராணாதி ஐவர்களுக்கு ப்ராணத்வம் முதலானவைகளைக் கொடுக்கும் பகவத் ரூபங்கள்தான். ஏனென்றால் வாக்யசேஷாத் அதற்கு அடுத்தாப்போலவே "ப்ராணஸ்யப்ராணம்" முதலான வாக்யங்கள் பாக்கி இருக்கின்றன. ப்ராணனுக்கும் ப்ராணனைக் கொடுக்கும் தன்மை "ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம்" இத்யாதிகளால் பகவானுக்கு பொருந்துவதால் என்று சொல்லப்பட்டது.

பஞ்சஜனர்கள் என்று இந்த சுருதியில் சொல்லப்பட்டவர்கள் யாரென்றால் ப்ராணாதிகளுக்கு ப்ராணத்வத்தைக் கொடுப்ப

வர்களான பகவத் ரூபங்கள். எப்படி ஏற்படுகிறது என்றால் இதே வாக்யத்தின் பாக்கி "ப்ராணஸ்ய ப்ராணம்" என்று இருக்கிறது. ப்ராணிகளுக்கு ப்ராணத்வாதிகளைக் கொடுக்கும் தன்மை விஷ்ணுவுக்குத்தான் ஏற்படுகிறது. எப்படி என்றால் "யச்ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் மனஸோ மன: யத்வாசோஹவாசம் ஸ உ ப்ராணஸ்ய ப்ராண: சக்ஷுஷஸ்சக்ஷு:" என்று சுருதியே இருந்துவருகிறது. விஷ்ணுவின் லிங்கம் அடையாளம் இவ்வாறு இருப்பதைக்கொண்டு விஷ்ணுவுக்குத்தான் பஞ்சஜன சப்தத்தால் சொல்லப்படும் தன்மை ஏற்படும். "ப்ராணஸ்ய ப்ராணம் உத சக்ஷுஷ: சக்ஷு: ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் அன்னஸ்ய அன்னம் மனஸோ மன:" என்று வாக்ய சேஷம் இருப்பதாய் மத்வபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருப்பது, மேற்சொன்ன பிருஹதாரண்ய சுருதியின் வாக்ய சேஷத்திற்கு ஸமானமான அர்த்தங்கொண்ட மாத்யந்தின சாகையின் வாக்ய சேஷம் என்று அறியப்பட வேண்டியதாகும். "ப்ராணஸ்ய ப்ராணம்" என்றால் எல்லோரையும் நடமாடச் செய்பவரான அதாவது ஸர்வசேஷ்டகரான முக்ய ப்ராணருக்கு ப்ராணம் என்றால் ப்ரகிருஷ்டமான உத்தமமான சேஷ்டகத்தன்மையாகிய ப்ராணத்வத்தைக் கொடுப்பவர் அந்த பகவான். அப்படியே சக்ஷுஸ்ஸுக்கு பார்க்கும் தன்மையைக் கொடுப்பவர். காதுக்கு கேட்கும் தன்மையைக் கொடுப்பவர். அன்னத்திற்கு சாப்பிட்டு ஜீவிக்கச் செய்யும் தன்மையைக் கொடுப்பவர். மனஸ்ஸுக்கு மனனம் செய்யும் தன்மையைக் கொடுப்பவர் என்று இந்த சுருதியின் அர்த்தமாகும்.

இதற்குமேல் மற்றொரு ஆக்ஷேபணை சொல்லப்படுவதாவது:- வாக்ய சேஷத்தில் காண்வர்களுக்குத்தான் இந்த தன்மையைக் கொடுப்பவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே முந்திய வாக்யத்திற்கு இந்த வாக்யசேஷம் தனிப்பட்ட அர்த்தமுள்ளதாகும். ஆகையால் ப்ராண ப்ராணிகளுக்கு விஷ்ணுத்வம் இருந்தாலும்கூட பஞ்சஜனர்களுக்கு விஷ்ணுத்வம் ஏற்படமாட்டாது என்று. இவ்வாறு சம்சயம் வந்தால் அதை நிவிர்த்திக்க ஸ்ரீ வேதவ்யாஸர் கூறுவதாவது:—

ओं ज्योतिषैकेषामसत्यन्ने ओं ॥ १४ ॥

14 ஓம் ஜ்யோதிஷைகேஷாமஸத்யன்னே ஓம்

"அன்னஸ்ய அன்னம்" என்று ஏகேஷாம் ஒரு சிலர்களான காண்வர்களின் சாகையில் அன்னே அன்னம் என்னும் பகவத்ரூபம் அஸதி சொல்லப்படாமல் இருப்பினும் ஜ்யோதிஷா "தத்தேவா: ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" என்று பூர்வவாக்யத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அந்த பகவத் ரூபத்தால் பஞ்சத்வ ஸங்க்யை அதாவது ஐந்து என்ற எண்ணிக்கையை பூர்த்திசெய்துகொள்ளவேண்டும்.

மேற்சொன்ன பஞ்சஜன வாக்யத்திற்கு முன்னடி, ஒரு வாக்யத்தைவிட்டு அதற்கு முன்னடியே "தத்தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" என்று ஆதித்யன் முதலான ஜ்யோதிஸ்ஸுகளுக்கு ஜ்யோதிஸ்ஸை கொடுக்கும் அந்த பகவத்ரூபத்தால் காண்வர்களுக்கும் ப்ராண ப்ராணிகளின் பஞ்சகம் ஏற்படுகிறது. ஆகையால் வாக்ய சேஷத்திற்கு தனியான அர்த்தமுள்ளது என்பது இல்லாமல் இருப்பதால் காண்வசாகை, மாத்யந்தின சாகை இவைகளின் வாக்யசேஷங்கள் இரண்டுமே ஒரே அர்த்தம் கொண்டவைகள்தான். அந்த ஆதாரத்தைக்கொண்டு பஞ்சஜனர்கள் என்பதற்கு விஷ்ணுதான் என்று ஏற்படுகிறது.

3-வது அதிகரணம் முடிந்தது.

4-வது காரணத்வேனச ஆகாசாதிகரணம்.

இந்த அதிகரணத்தில் ஆகாசம் முதலான சப்தங்களுக்கு பரமாத்மாவாகிய விஷ்ணுவிடம் ஸமன்வயம் பொருத்துதல் ஏற்படச்செய்யப்படுகிறது. தைத்திரீய சுருதியில் "ஆத்மன: ஆகாசஸ்ஸம்பூத:, ஆகாசாத்வாயு:, வாயோரக்னி:, அக்னேராப:, அத்ப்ய: ப்ருதிவீ, ப்ருதிவ்யா: ஓஷதய:, ஓஷதீப்யோ அன்னம், அன்னாத் புருஷ:" என்று ஆகாசசப்தம் முதற்கொண்டு அன்ன சப்தம்வரையிலுள்ள சப்தங்களால் வாச்யத்வம் சொல்லப்படும் தன்மை விஷ்ணுவுக்கு பொருந்தாது. ஏனெனில் ஆகாசாதிகள் ஆத்மாதிகளின் கார்யம் அதாவது ஆத்மாதிகளால் செய்யப்பட்டதென்று சொல்லப்பட்டிருப்பதால் எனப்பட்டது. (தொடரும்)

ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
ஸங்கிரஹ ராமாயணம்.
யுத்தகாண்டம். 13-வது ஸர்க்கம்.

(முன் 22-வது வால்யூம் 220-ம் பக்கம் தொடர்ச்சி)

அந்த மலையின் அடியால் கர்விஷ்டனான ராவணன் மிக்க அதிகமான வலியை அடைந்தான். பத்துதலைகொண்ட ராவணன் பத்து வாயினின்றும் ரக்தத்தை கக்கினான். இடைவெளி ஏற்பட்ட இந்த சந்தர்ப்பத்தில் முக்கிய ப்ராணரான ஹனுமார் பிரக்ஞைபற்று கிடந்த ராமானுஜரான லக்ஷ்மணனை, தேவோத்தமரான ஸ்ரீ ராமருடைய பாதாரவிந்தத்தினிடம் கொண்டு போய் சேர்த்தார். தன் தம்பியின் மார்பிலிருந்து சர்வசக்தி படைத்த ஸ்ரீ ராகவன், ராவணன் போட்ட அந்தசக்தி ஆயுதத்தைப் பிடுங்கிவிட்டு ஔஷதிகளைக் கொண்டுவரும்படி ஆஞ்ஜனேயரை ஆக்ஞாபித்தார். மகா பராக்கிரமசாலியான வாயுபுத்ரர் ஹனுமார் வாயுவைப்போன்ற வேகமுள்ளவராய், முன்பு செய்தது போல் ஆகாயத்தில் பறந்துபோய், எல்லா ஔஷதிகளுக்கும் இருப்பிடமாயுள்ள பர்வத ச்ரேஷ்டமான கந்தமாதன மலையைக்கொண்டு வந்தார். அந்த மலையிலுள்ள ஔஷதிகளின் காற்றுபட்டமாத்திரத்தில் சூரியகுலத்துக்கு கீர்த்தியை விருத்தியாக்கும் லக்ஷ்மணன், யாதொரு காயமன்னியில் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். வீரர்களான வானரர்கள் ஸம்பூர்ணமான ஆனந்தத்தைக்கொண்ட ஸ்ரீ ராமசந்திரனை நமஸ்காரம் செய்தனர். வெண்மையான காந்தியுள்ள மந்தஹாஸத்தால், நீலவர்ணமுள்ளவனை வெளுப்பு வர்ணம் கலந்ததாய்ச் செய்துகொண்டு, வாயுபுத்ரரான ஹனுமாரைக்கண்டு மகிழ்ந்தவராய், ஸர்வோத்தமரான பகவான் ஹனுமாரை ஆலிங்கனம்செய்தார். அப்போதைக்கப்போது இறந்து கிடந்த ராக்ஷஸர்களை வானர ச்ரேஷ்டர்கள் ஸமுத்ரத்தில் ஸ்ரீ ராமரின் ஆக்ஞையின்பேரில் எறிந்துவந்தனர். அதனால் இந்த ஔஷதிகளின் காற்றுபட்டும் கூட இறந்துபோன ராக்ஷஸர்கள் பிழைத்து எழுந்திருக்கவில்லை. ஐம்பதனாயிரம் யோஜனை

தூரம் முன்போலவே அந்த கந்தமாதன மலை போகும்படி வாயுகுமாரரான ஹனுமார் அந்த மலையை இலங்கையிலிருந்தே விட்டெறிந்தார். மலையும் சரியாய் அவ்வளவுதூரம்போய்விழுந்து பூமியிலிருந்து பிடுங்கிய அடையாளமே இல்லாமல் அங்கேயே போய்விட்டது. பிறகு ஸ்ரீ ராமசந்திரர் தன்னுடைய ஸைனியத்தை அபிநந்தனம் செய்துவிட்டு, யுத்தம் என்னும் நாடகத்தை நடத்துவதற்காக முதலில பூர்வாங்கத்தை நடத்துவதைப்போல், ஒரு தரம் தனுஸ்ஸை இழுத்து டங்காரம் செய்தார். இதைக் கேட்டுவிட்டு கர்வங்கொண்ட ராவணன் பத்து முகமுள்ளவனாய் விமானத்தில் விளங்குபவனாய், தனுஸ்ஸை வளைத்து மண்டலாகாரத்துடன் தரித்தவனாய், புண்டரீகாக்ஷனான ஸ்ரீ ராகவனை யுத்தத்திற்கு அணுகினான். பிரம்மா பரமசிவன், இவர்களை முன்னிட்டுக்கொண்டு மகேந்திரன் முதலான தேவர்கள் கந்தர்வர்கள் மகரிஷிகள் இந்த ராமராவண யுத்தத்தைப் பார்க்க ஆகாயத்தில் வந்து நின்றனர். இந்த ராக்ஷஸனான ராவணன் விமானத்தில் ஏறி யுத்தம் செய்யும்பொழுது என் நாதனான ஸ்ரீ ராமசந்திரன் பூமியில் நிற்கலாகாது என்று எண்ணி, மகேந்திரன் ஸ்ரீ ராமசந்திரமூர்த்திக்கு தன் ரதத்தை அனுப்பித் தந்தார். ஆகாயத்திலிருந்து அந்த மகேந்திரனின் ரதத்தை பூமியில் இறக்கி அதன் ஸாரதியான மாதலி அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு "ஜகத்ஸ்வாமியான ஸ்ரீ ராமசந்திரப்ரபோ! இந்த ரதத்தில் சந்தோஷமாய் வீற்றிருந்து ஜயஸ்ரீயுடன் விளங்குவீர்" என்று ஸ்ரீ ராமரிடம் விக்ஞாபனம் செய்துகொண்டார். மகேந்திரனின் ரதமாகிய உதயமலையில் ஏறியவரும், ஜகத்தை எல்லாம் விழுங்கும் ராவணனாகிய இருளை நாசம் செய்வதில் ஈடுபட்டிருப்பவருமான ஸ்ரீ ராமராகிய ஸஹஸ்ரகிரணன் சூரியன் பிரகாசமடைந்தார். பலவைகளும் பலவகைகளும் பயங்கரமானவைகளும் தீக்ஷ்ணமானவைகளும் அழுத்தமானவைகளும் தங்கமுனையுள்ளவைகளும் பிரகாசிக்கும் இறகுகள் கட்டியவைகளுமான பாணங்களை ராவணன் ராமரிடம் ப்ரயோகம் செய்தான். அநந்தனான ஸ்ரீ ராகவன் அந்தபாணங்களை எல்லாம் சிறிதும் தவக்கமன்னியில் பல்லம் என்னும் பாணங்களால் கத்தரித்தார். விளையாட்டாய் சிரித்துக்கொண்டே சுவயம் பாணங்களை ராவணனிடம்

ப்ரயோகம் செய்தார். வலது புரமாயும் இடது புரமாயும் விசித்ரமான மண்டலங்களைக் காட்டிக்கொண்டு அந்த ராம ராவணர்கள் ஜகத்து ஆச்சரியப்படும்படி யுத்தம் செய்தனர். சூரர்களான அவ்விருவர்கள் பத்து திக்குகளையும் பாணங்களால் மறைத்தனர். இருண்ட இருட்டால் உலகம் கண் கெட்டதுபோலாயிற்று. வானரர்களும் ராக்ஷஸர்களும் கூட இதைக்கண்டு ஆச்சரியத்தால் மலர்ந்த கண்களுள்ளவர்களாய் அவ்விருவர்கள் செய்யும் யுத்தத்தைப் பார்த்துக்கொண்டு ஆகாயத்தில் நின்றுவிட்டனர். உலகமே இந்த யுத்தத்தைக்கண்டு ஒரு சமயம் சந்தோஷமடையும். ஒரு சமயம் பயப்படும். ஒரு சமயம் சிறிது சிறிது கலக்கம் அடையும். மூன்று உலகமும் விசித்ரமாகவே ஆச்சரியப்பட்டு காணப்பட்டது. ராவணன் ராமருடைய சிரஸ்ஸில் நாராசபாணங்களை ஒன்றின்பின் ஒன்றாய்விட்டு ஓர் மாலையாய் போட்டான். அது நீலோத்பல புஷ்பங்களின் மாலையைப்போல் ஸ்ரீ ராமருக்கு சங்கடத்தை விளைவிக்கவில்லை. கைடபாரியான பகவான் ஸ்ரீ ராமசந்திரன் ராக்ஷஸ ராஜனான ராவணனுடைய நெற்றியை பாணங்களால் வெகு சாமர்த்தியமாக பிளந்தார். அதனால் ராவணன் கலக்கமடைந்தான். ராவணன் அஸுராஸ்திரத்தால் சிம்ஹம் புலி இவைகளைப்போல் உள்ள வாயுள்ளவைகளும் பக்ஷி, பாம்பு இவைகளின் வாய்களைப்போல் வாய்களுள்ளவைகளுமான அநேக பாணங்களை ஸ்ருஷ்டிசெய்தான். ஸ்ரீ ராமசந்திரன் ராவணனுடைய அஸ்திரங்களை தன் மந்திரமான ராம மந்த்ரமாகிய அஸ்திரங்களால் தடுத்தார். யமாஸ்திரம் ஆக்னேயாஸ்திரம் இத்யாதி பெயர்கள் அக்னிமுதலானவர்களால் சம்பாதித்துக்கொள்ளப்பட்டவைகள் ஆகின்றன. ப்ரம்ம இந்திரன், பசுபதி முதலான தேவர்கள் எந்த ஸ்ரீ ராமசந்திரனுடைய அனுக்ரஹத்தால் ஜீவந்தர்களாயும் சக்தி முதலானவைகளைக் கொண்டவர்களாயும் இருக்கின்றனரோ, அப்பேர்ப்பட்ட ராமர் அஸ்திரதேவதைகளுக்கு பாதந்திரர் என்பது எப்படி ஆகும்? ஸ்ரீ ராமசந்திரர் ஆக்னேயாஸ்திரத்தால் அக்னியை வாயில் கொண்ட பாணங்களை ஸ்ருஷ்டித்தார்.

(தொடரும்)

210422

ஓம் ஸ்ரீ குருப்யோநம:

மாத்வமித்திரன் ஜூபிளி.

“நமஸ்தே கர்மணாம் கர்ம நாமோமித பராக்ரம| ஹ்ருஷீகேச நமஸ்தேஸ்து ஸ்வர்ண கேச நமோஸ்து தே (1) நமோஸ்த்வநந்த நாசாய நம: கைடப நாசினே| நம: ஸஹஸ்ரசிர்ஷாய ஹ்ருஷீகேசாய தே நம: (2) தயாநிதே தயாநிதே தயாநிதே தயாநிதே| நமோ நமோ நமோ நமோ நமோ நமோ நமோ நம: (3) ப்ரம்மேந்த்ர ப்ரமுகா ஸ்ஸர்வே தப: குர்வந்தி யத்க்ருதே| த்வதீனா ரமா ஸாது த்வத் ப்ரஸாதாபிகாங்க்ஷிணீ (4) ஸர்வ ஸ்ருஷ்டி க்ரியாகர்த்ரு ப்ரம்மாத்யா தேவதா கணா:| த்வதாக்ஞாகாரிண:ஸர்வே நாஸ்தி கஸ்சித் தவாதிக: (5) பஞ்சபூத விஸ்ருஷ்டாய பஞ்சமாத்ராத் மகாயச| க்ஞானகர்மேந்திரியேசாய ஹ்ருஷீகேசாய தே நம: (6) யோந்த: ப்ரவிச்ய மமவாசமிமாம் ப்ரஸுப்தாம் ஸஞ்ஜீவயத்ய கில சக்தி தர: ஸ்வதாம்னா| அன்யாம்ஸ்ச ஹஸ்த சரண ச்ரவண த்வகாதீன் ப்ராணான் நமோபகவதே புருஷாய துப்யம் (7) ஸத்யவ்ரதம் ஸத்யபரம் த்ரிஸத்யம் ஸத்யஸ்ய யோனிம் நிஹிதம் சஸத்யே| ஸத்யஸ்ய ஸத்ய ம்ருதஸத்யநேத்ர ஸத்யாத்மகம் த்வாம் சரணம் ப்ரபன்னா: (8) ப்ரம்மாந்தா: குரவஸ் ஸாக்ஷாத் இஷ்டம் தெய்வம் ஸ்ரீ ய: பதி:| ஆசார்யா: ஸ்ரீ மதாசார்யா: ஸந்து மே ஜன்ம ஜன்மனி (9) பூஜ்யாய ராகவேந்த்ராய ஸத்ய தர்ம ரதாய ச| பஜதாம் கல்பவ்ருக்ஷாய நமதாம் காமதேனவே (10)

“ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத், ஸதேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத், ப்ரம்மாவா இதமக்ர ஆஸீதேகமேவ, ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரம்மா நேசானோ நாக்னீஷோமௌ நேமேத்யாவா ப்ருதிவீ, நாராயணாத் தேவ ஸர்வாணி பூதானி ஸமுத்பத்யந்தே, நாராயணாத் ப்ரம்மா ஜாயதே, நாராயணாத் ருத்ரோஜாயதே, ஸ்வாதந்திரிய சக்தி விக்ஞான ஸுகாத்யை ரகிலைர்குணை:| நிஸ்ஸீமத்வேன தே ஸர்வே தத்வசாஸ் ஸர்வதேவதா:|| விஷ்ணும் ஸர்வகுணை: பூர்ணம் க்ஞாத்வா ஸம்ஸார வர்ஜித:|

நிர்துக்காநந்த புஞ்நித்யம் தத்ஸமீபே ஸமோததே|| முக்தாநாமாச்ரயோ விஷ்ணு ரதிகாதிபதி ஸ்ததா| தத்வசா ஏவ தே ஸர்வே ஸர்வதைவ ஸ ஈசுவர:”

இத்யாதி எண்ணிறைந்தவைகளான வேதங்கள், புராணங்கள், இதிஹாஸங்கள் அநாதி அநந்தகாலமாய் அநேக விதமாய் எந்த ஹ்ருஷீகேசன் எனப் பெயர்கொண்ட நாராயணனே ஜகத்துக்கெல்லாம் ஸர்வோத்தம வஸ்து என்று கொண்டாடுகின்றனவோ, எந்த பகவான் “த்வத்பாத பூஜனே நித்யம் பத்தகங்கண பூஷிதா” என்று எப்போதும் ஸர்வஸம்பத்துக்கும் ஈசுவரியான மகாலட்சுமியால் தழுவப்பட்டிருக்கும் பாத பங்கயமுள்ளவரோ, “பஹுசித்ர ஜகத்பஹுதாகரணாத் பரசக்தி ரநந்தகுண: பரம:” என்று அநேக பிரமாணங்களின்படி யார் அசிந்த்யாத்புத சக்தி படைத்தவரோ, எந்த ப்ரபு ஸமஸ்தமான தேவர்களாலும் வணங்கப்படுபவரோ, “ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி சயத்வதந்தி| வேதைஸ்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:” முதலான பிரமாணங்களால் எந்த பகவான் ஸத்சாஸ்திரங்களால் மட்டில் அறியப்பட முடிந்தவரோ, “ஸ ஏஷ பகவான் விஷ்ணு: ப்ரஜாபதிரிதீரித:| தஸ்மாத் ஜாதாஸ்ஸர்வ தேவா: ப்ரம்மாத்யாஸ்தேப்ய ஏவச” என்று எந்தபகவான் ஸமஸ்த லோகங்களுக்கும் முக்ய காரணமாய் இருப்பவரோ, யார் எல்லோருக்கும் குருவாய் இருப்பவரோ, ஸாதுஜனங்களின் அபீஷ்டத்தை அளிக்கும் கருணாமூர்த்தி யாரோ, எல்லா கல்யாண குணங்கள் நிறைந்தவர் யாரோ, யார் நித்யரோ, யார் பாரதந்திரியம் இல்லாதவரோ, எல்லா ப்ரம்மாண்டத்திற்கும் முக்ய ஜீவன பூதமாய் இருப்பவர் யாரோ, எப்பேர்ப்பட்ட தோஷமும் இல்லாத எந்த ஸ்வாமியாரோ, எந்த ப்ரபுவின் அத்யர்த்த ப்ரஸாதமில்லாமல் மோக்ஷம் ஏற்படமாட்டாதோ, “நாயமாத்மா ப்ரவசனேன லப்யோ நமேதயா ந பஹுனா ச்ருதேன, யமேவைஷவ்ருணுதே தேன லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம்” என்று எந்த ஈசுவரன் பாடப்ரவசனம் உபன்யாஸம் முதலானவைகளாலோ, தன்ஞான பலத்தாலோ, சாஸ்திர சிரவணாதிகளாலோ, அடையமுடியாதவர் யாரோ. (தொடரும்)

MADHWA MITRAN.

மாத்வ மித்திரன்.

Vol. XXII] 1949—1950ஹு [வாலியம் 22.

INDEX—பொருளடக்கம்.

*தொடர்ந்த கிரந்தங்கள்.

நெம்பர். விஷயம். பக்கங்கள்.

*1. ஸ்ரீ பகவத்கீதை அர்த்தம் [ஸ்ரீமத்வ பாஷியத்தை அனுசரித்து இப்பத்திரிகாசிரியர் எழுதியது]
பக். 1 (அக். 3 சுலோ: 17) 21 (3—19) 41 (3—20) 61 (3—23) 81 (3—26) 101 (3—29) 121 (3—31) 141 (3—34) 161 (3—35) 181 (3—36) 201 (3—38) 221 (3—39—40)

*2. ஸங்கிரஹராமாயணம் [ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றியது]
பக். 5 (யுத்தகா. ஸர் 9) 25 (ஸர் 10) 65 (ஸர் 10) 85 (ஸர் 11) 125 (ஸர் 11) 165 (ஸர் 11-12) 215 (ஸர்12-13)

*3. ஹரிகதாம்ருதஸாரம் [ஸ்ரீ ஜகந்நாததாஸர் இயற்றியது]
பக். 11 (ஸங் 19 பாட் 29; 20 பாட் 2) 28 (ஸங் 20 பாட் 3—11) 49 (ஸங் 20 பாட் 12—17) 71 (ஸங் 20 பாட் 18—26) 89 (ஸங் 20—21 பாட் 5) 108 (ஸங் 21 பாட் 6—15) 188 (ஸங் 21—16; ஸங் 22—6) 205 (ஸங் 22 பாட் 6—9)

*4. ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் சரித்திரம்
பக்கங்கள் 8, 31, 45, 68, 105, 149, 185.

*5. சிராத்தபோதினி
பக்கங்கள் 34, 74, 133, 152, 170, 208.

*6. பஜனை பத்ததி
பக்கங்கள் 18, 56, 94, 173.

7. முள்ளுகோனேயம்யாலே என்னும் பதத்தின் அர்த்தம் பக்கங்கள் 15, 51.

8. தாரதம்ய ஸ்தோத்திரம் [ஸ்ரீ மத்வாசாரியாரின் ஸஹோதரி ஸ்ரீ கல்யாணிதேவி இயற்றியது. மூலமும், இப்பத்திரிகாசிரியரின் தமிழ் அர்த்தமும், விளக்கமும், கொண்டது] பக்கங்கள் 92, 111, 168, 191, 229.

9. மதப்ரசாரம் செய்யும் சிறு நிருபங்கள்

வாயுபகவான ஸர்வஜீவோத்தமர்	96—97
எமது ப்ரயத்தினமும் அவசியமே	128—131
மாத்வமித்திரனை படிப்பதும் மோக்ஷஸாதனமே	175-178
துக்கம் விலக உபாயம்	145—148

10. உபன்யாஸங்கள் 158, 232, 237

11. மதப்ரமேயங்கள்

ப்ரதிமைகள்	132
கலசதேவதைகள்	118

12. பாலர் ஸ்தோத்திரங்கள் 193, 225

13. எமது ஆனந்தகோலாகலதினம் 214

ஸ்ரீ ராகவேந்திரரின் ஓர் லீலாசம்பவம்	118
கோகுலாஷ்டமி பாரணே ப்ரமாணங்கள்	116
ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் கிருபாவிலாஸங்கம்	98
ஸ்ரீ உத்தராதி மடம் ஸ்வாமிகளின் கும்பகோணம் விஜயம்	234

14. வேதாந்தவிசாரம் [ஆசாரியாருக்கும் சாஸ்திரியாருக்கும் சம்பாஷணை]

நேதி நேதி என்னும் சுருதியின் விசாரம்	135—139

15. உலகவர்த்தமானமும் படிப்பினையும் 154—157

16. விளம்பரம் 20, 40, 58, 80, 99, 139, 210, 213, 239

17. செய்தித் திரட்டு 36,59,78,114, 139, 157, 179, 199, 231

18. சந்தாதாரர்களின் அபிநந்தனங்கள் 36—38

மாத்வமித்திரன் காலண்டர்.

இவ்வருடம் யுகாதி பண்டிகை சந்தர்ப்பதிற்கே எமது மாத்வமித்திரன் காலண்டர் வெளியாகி ஆர்டரின்படி பல பெரிய ஊர்களுக்கும் ஏராளமான நபர்களுக்கும் வினியோகம் செய்யப்பட்டுவிட்டன. பிரதி வருஷமும் எமது மாத்வ மித்திரன் காலண்டர்கள் பெருவாரியாக ஒரு சில பெரிய ஊர்களில்தான் பிரசாரமடைகின்றன. எல்லா ஊர்களிலும் முக்யமாய் தமிழ் ஜில்லாக்களின் கிராமாந்தரங்களிலேயும் இருந்து வரும் மாத்வ குடும்பங்களுக்கு தர்மானுஷ்டான விஷயங்களில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் மேோபகாரத்தையும் செய்யவேண்டு மென்பதுதான் மாத்வமித்திரன் காலண்டர் பிரசுரத்தின் பிரதான நோக்கம். அந்த நோக்கத்தை இந்த வருடமாவது பூர்த்தி செய்வதென்ற எண்ணங் கொண்டு, மாத்வர்கள் அதிகமாய் இல்லாத சாமாண்ய ஊர்களிலுள்ள மாத்வ மித்திரன் பத்திரிகை சந்தாதாரர்களுக்கும், நாம் தனித்து எமது அபிப்பிராயத்தை அறிவித்துள்ளோம். ஆதலால் மாத்வ மித்திரனின் பரந்த நோக்கத்தை அறிந்த மாத்வ மித்திரன் சந்தாதாரர்கள், மாத்வ குடும்ப வாழ்க்கைக்கு ஆசார அனுஷ்டானங்களில் மிக்க சிரத்தையையும், உதவியையும் புரிந்து வரும் எமது மாத்வ மித்திரன் காலண்டர்களை அவரவர்களின் பந்துக்களுக்கும், ஊரார்களுக்கும் போய் சேரும்படி பிரசாரம் செய்ய கேட்டுக்கொள்கிறோம். காலண்டர்கள் பிரதிகள் வெகு சொற்பம்தான் கைவசமிருக்கின்றன. இவ் விளம்பரத்தைக் கண்டவுடன் சந்தாதாரர்களும் தேவையான காபிகளுக்கு ஆர்டர் செய்யவும். காலம் கடந்தால் அனுப்புவது நிச்சயமில்லை. காலண்டர் பிரதி 1-க்கு அணா ஆறு. தபாற்கூலி அணா 1. தான். பத்திரமாய்பெற விரும்புவர்கள் ரிஜிஸ்டர் பீசு அணா நான்கு சேர்த்து தபாற் கூலியை அனுப்பவேண்டும். வி. பி. யில் நிச்சமாய் அனுப்ப படமாட்டாது.

மானேஜர், மாத்வ மித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்கோணம்.

அவதூதகீதை.

ஒன்றிலிருந்து நாம் ஓர் படிப்பினையைக் கற்றுக்கொண்டால், அது எதுவாயினும், தனக்கு குரு என்று ஓர் அவதூதவ்ரதமுள்ளவர் கருதியுள்ளார்.

1. பூமி ஓர் குரு. பூமி ஒருவனால் அவனுடைய ஜீவனார்த்தம் கலப்பை முதலானவைகளால் உழுதல் வெட்டுதல் முதலான ஹிம்சைகள் செய்யப்பட்ட போதிலும் எல்லாவற்றையும் பொருத்துக்கொள்கிறாள். அதைப்பார்த்து நாமும் ஸஹிக்கும் தன்மையையும் அஹிம்சையையும் கொள்ளவேண்டும் ஈ, எரும்பு, மூட்டப்பூச்சி முதலானவைகள் கடித்தாலும் தேஹாபிமானம் விட்டு அதைச் சஹிக்கவேண்டும். நாம் ஈசுவரனுக்கு அதீனமானவர்கள் என்று பகவத் ஸங்கல்பத்தால் ஏற்பட்ட சுகதுக்கங்களை ஆனந்தமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமே அல்லாது இதற்கு காரணமென்று இதராளிடம் ஹிம்சாபுத்தியைக் கொள்ளலாகாது. (தொடரும்)

விசேஷ தினங்கள்

11—4—50 மங்களவாரம் சிரவணம், உப. விஷ்ணுப, உப.

13—4—50 குருவாரம் ஏகாதசி உப. இன்று மேஷ சங்கிரமணம் புண்யகாலம் மணி 11-59க்குமேல் கேவலம் தானம் ஸ்நானம் மட்டில் உண்டு.

16—4—50 பானுவாரம் தர்சம் திலதர்ப்பணம்.

17—4—50 சோமவாரம் அசுவத்த ப்ரதக்ஷிணம். விஷ்ணுப. உப.

20—4—50 குருவாரம் அக்ஷயத்ருதியை.

28—4—50 சுக்கிரவாரம் ஏகாதசி உப.

30—4—50 பானுவாரம் நரஸிம்ம ஜயந்தி.

2—5—50 மங்களவாரம் பௌர்ணமி. வைசாக ஸ்நானம் பூர்த்தி. ஆகாமாவை விஷ்ணுப. உப.

Printed by N. Subramania Iyer at Sri Venkatesuar Power Printing Works
Edited & Published Sri Bhagavatha Ranganathacharier Kumbakonam.

21022